மேலும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 2011-2012 நிதிநிலை அறிக்கையில் இலங்கைத் தமிழர் முகாம்களின் நிலையினை மேம்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என்றும், முகாம்களில் உள்ள விடுதிகளில் அடிப்படை வசதியை மேம்படுத்தும் பொருட்டு இந்த ஆண்டு ரூ. 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும் அறிவித்துள்ளார்.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ச. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 1 முதல் 5 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர், கழகக் குடும்பங்களின் ஒப்பற்ற தலைவி, தமிழர்களுக்கு எல்லாம் தலைசிறந்த தலைவியாக இருக்கிற எங்களின் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் தொட்டுப் பணிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) 2011-2012 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 1 முதல் 3 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*